OPEN ACCESS

Manuscript ID:
TAM-070320236086

Volume: 7

Issue: 3

Month: January

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 20.10.2022

Accepted: 28.11.2022

Published: 01.01.2023

Citation:
Vaman, N. "Hindu Culture of Batticaloa During the Anuradhapura Period." *Shanlax International Journal of Tamil Research,* vol. 7, no. 3, 2023, pp. 10–20.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i3.6086

*Corresponding Author:
vamannagaiah@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Hindu Culture of Batticaloa during the Anuradhapura Period

**N. Vaman**

*Senior Lecturer, Department of Hindu Civilization*

*Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka*

*https://orcid.org/0000-0001-7787-7837*

**Abstract**

Batticaloa region which is situated in the East Ceylon has been a location where Hindu Culture has been prevailed for a longtime. The primitive families have been Hindus and from time to time people from various parts of India settled in various parts of Batticaloa. The objective of this study is to find out the such Hindu tradition prevailed in Btticaloa for a longtime and the nature of Hindu cultural aspects related period of Anuradhapura Era. Historical study and Descriptive methods this study has been undertaken. Inscriptions, Batticaloa historical Texts and oral traditions have been used as sources. The cultural mixture came into being through Indian settlements, 'Thesathu kovils' worshipping traditions, 'Veera Saiva' diffusions, social life and such information are being disclosed.

**Key Words:** Batticaloa, Hindu Culture, Thesathu Kovils, Veera Saivam, Mukkuvar.

**References**

1. Kandiah, V.C. 2002. Mattakkalappu Tamilaham, Exil, France.
2. Maunaguru, S. 2014. *Traditional Drama of Batticaloa*. Colombo, Kumaran book house.
3. Maunaguru, S. 2003. *Matttakkalappu Thamizakathil Inthu Panpadu*. Batticaloa, Second Wold Hindu Conference.
4. Nataraja, F.X.C. (ed.), 1998. *Mattakkalappu Manmiyam*. Batticaloa, Cultural Council.
5. Sivasanmugam, G. 2000. Mattakkalappu Kukankula Mukkukar Varalarum Marapukalum, Batticaloa, Vipulam Publication.
6. Sivasupramaniyam, V. 2004. *Mattakkalappu Naattarial*, Batticaloa.
7. Thanapakkiyam Gunapalasingam. 1993. *Mattakkalappu Manmiyam* (A Research), Batticaloa.
8. Thangeshwari, K. 2007. *Kilakkilangai Poorveeka Varalaru*. Chennai, Manimekalai Pirasuram.
9. Thillainathan, S. 2015. *Mattakkalappu Tamilar Panpatu Marapukal*. Colombo, Kumaran Book House.
10. Vellavoorgopal. 2016. *Mattakkalappu Thesam Varalarum Valakkarum*. Colombo, Chemamdu book Centre.
11. Vellavoorgopal. 2005. *Mattakkalappu Varalaru*. Batticaloa Manu Veda Publication.

# அநுராதபுர கால மட்டக்களப்பின் இந்துப்பண்பாடு

***நா. வாமன்***
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***
*கிழக்கிலங்கையில் அமைந்துள்ள மட்டக்களப்புப் பிரதேசமானது நீண்ட காலமாக இந்துப்பண்பாடு நிலைபெற்று வந்துள்ள ஒரு பிரதேசமாகும். இப்பிரதேசத்தின் பூர்வீகக் குடிகளாக இந்துக்கள் வாழ்ந்து வருவதுடன் காலத்துக்குக் காலம் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மட்டக்களப்பின் பல பாகங்களிலும் மக்கள் குடியேறியுள்ளனர். இத்தகைய நீண்டகாலப் பாரம்பரியத்தைக் கொண்ட மட்டக்களப்பின் அநுராதபுர காலப்பகுதியில் நிலவிய இந்துப்பண்பாட்டம்சங்களைக் கண்டறிதலே இவ் ஆய்வின் நோக்கமாகும். வரலாற்றியல் ஆய்வு, விபரண ஆய்வு ஆகிய ஆய்வு முறையியல்களைப் பயன்படுத்தி இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்வெட்டுக்கள், மட்டக்களப்பு வரலாற்று நூல்கள் என்பவற்றோடு வாய்மொழி மரபுகளும் ஆய்வுக்கான மூலங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்தியக் குடியேற்றங்கள் மூலமாக ஏற்பட்ட பண்பாட்டுக் கலப்பு, அரசர்களும் இந்துப்பண்பாடும், தேசத்துக் கோயில்களின் வழிபாட்டு மரபுகள், வீரசைவப் பரம்பல், சமூக வழமைகள் முதலானவை இவ் ஆய்வில் வெளிக்கொணரப்படுகின்றன.*
***முக்கியச் சொற்கள்:*** *மட்டக்களப்பு, இந்துப்பண்பாடு, தேசத்துக் கோயில்கள், வீரசைவம், முக்குகர்.*

## அறிமுகம்

இலங்கையின் கிழக்குக் கரையோரப் பகுதியில் மட்டக்களப்புப் பிரதேசம் அமைந்துள்ளது. இலங்கைத் தமிழர் பூர்வீக காலம் முதலாகச் செறிந்து வாழும் பிரதானமான நிலப்பகுதிகளில் மட்டக்களப்பும் ஒன்றாகும். வடக்கே வெருகலாற்றினையும், தெற்கே மாணிக்க கங்கையினையும், கிழக்கே வங்காள விரிகுடாக் கடலினையும், மேற்கே ஊவா வெல்லஸ்ஸ மலைத் தொடர்களையும் இப்பிரதேசம் எல்லைகளாகக் கொண்டிருந்தது. (வெல்லவூர்க்கோபால், 2005: 16) 1961ஆம் ஆண்டு தொடக்கம் மட்டக்களப்பு மாவட்டம், அம்பாறை மாவட்டம் என்னும் இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டமும் ஒவ்வொரு அரசாங்க அதிபரினால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. (மௌனகுரு,சி.,1998: 75)

இந்து, இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களின் சமரசத் தன்மையை இன்று மட்டக்களப்புப் பிரதேசம் கொண்டிருப்பதாக அமையினும் இதன் நீண்டகால வரலாற்றுத் தளம் இந்துப்பண்பாட்டின் வேர்களாலேயே நிலை கொண்டிருந்தது. ஆரியச் சுவடுகள் பதியாத மேற்கத்திய நாகரிகத்தை உள்வாங்காத பண்பாட்டு நிலைக்களமாகத் திகழ்ந்த பிரதேசமாக இதனைச் சிறப்பித்துக் கூற முடியும்.

காலத்துக்குக் காலம் இங்கு ஏற்பட்ட அந்நியப் படையெடுப்புக்கள், அரசியல் மாற்றங்கள், குடியேற்றங்கள் என்பவற்றுக்கியைய இப்பகுதி இந்துப் பண்பாடுமாற்றமடைந்ததாயினும் பண்டைய வழிபாடு தொடக்கம் அண்மைக்கால வழிபாடுவரை அத்தனைவழிபாடுகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

இப்பிரதேசப் பண்பாடு ஒரு குறிப்பிட்ட இன, மத, சாதி வர்க்கங்களுடன் மட்டும் நின்றுவிடவில்லை. அதன் தன்மை பரந்துபட்டது. பல்வகைமையுடையது. காலத்துக்குக் காலம் அங்கு வந்து குடியேறியவர்களின் பண்பாடும், ஏற்கனவே அங்கு வாழ்ந்த சுதேசிகளின் பண்பாடும் வெவ்வேறானவை. ஆனால் அவை இரண்டும் ஏதோ ஒரு வகையில் கூட்டிணைவைப் பெறுகின்றன.

இந்தியாவுடன் மட்டக்களப்பின் வரலாற்றுப் பண்பாடு, உறவுகள் யாவற்றிலும் தொன்மையும் நெருக்கமும் வாய்ந்தவையாக இருந்தன. மிகப் பழங்காலத்திலே இந்த உறவுகள் ஏற்பட்டிருந்தது என்பதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன. ஆரம்பகால இந்தியர்களும் மானிட இன நோக்கிலும், மொழித் துறையிலும் ஒருவரோடு ஒருவர் உறவு கொண்டிருந்தார்கள். இதன் காரணமாக இரு நாடுகளுக்குமிடையில் பண்பாட்டுத் தொடர்புகள் வளர்ச்சியடைந்தன. மொழி, கலை வடிவங்கள், வழிபாட்டு முறைகள், சமய சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள் என்பவற்றின் மீது இந்தியப் பண்பாடு மிகப்பெருந்தாக்கம் செலுத்தியது.

மட்டக்களப்பின் இந்துப்பண்பாடு குறித்து சி.மௌனகுரு மேல்வருமாறு குறிப்பிடுவார் "பன்மைத் தன்மையும், ஒன்றில் இன்னொன்றன் அம்சங்களைக் காண்பதும், ஒன்றையொன்று புரிந்து கொண்டு வாழ்வதும் தான் ஜனநாயகத்தின் உச்ச அம்சம். அது மட்டக்களப்பின் இந்துப் பண்பாட்டின் நடைமுறையிற் காணப்படுகின்றது. வானவில்லின் அழகு அதன் ஏழு நிறங்களால் உருவாவது போல மட்டக்களப்புத் தமிழகத் தின் இந்துப் பண்பாட்டின் அழகு அதன் பன்மைத் தன்மையால் உருவாகியுள்ளது." (மௌனகுரு,சி., 2003: XVII) இத்தகைய சிறப்புப் பொருந்திய மட்டக்களப்பின் இந்துப்பண்பாட்டு வரலாற்றில் அநுராதபுர காலம் (கி.மு. 4 - கி.பி.10) பெறுகின்ற முக்கியத்துவத்தினை ஆராய்வதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

## அநுராதபுர காலப்பகுதியில் இந்துப் பண்பாடு

இலங்கையில் அநுராதபுரகால ஆட்சிப் பகுதியில் மட்டக்களப்பில் இந்துப் பண்பாடு சிறந்து விளங்கியமைக்கு போதுமான சான்றுகள் கிடைக்கின்றன. மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கள், மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடும் கருத்துக்கள் என்பன முக்கிய ஆதாரங்களாகின்றன. கிழக்குப் பிரதேசத்திலே காணப்படும் குகைகளிலே பல பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் பரணவிதான வாசித்து விளக்கியுள்ளார். குசலன்கந்த தொடக்கம் போவத்தகல வரையும் உள்ள பகுதியில் கி.மு கால பிராமிக் கல்வெட்டுக்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை எல்லாமே குகைக் கல்வெட்டுக்களாகும். பரணவிதானவினால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ள "Inscription of Ceylon" முதலாம் பகுதியில் (1970) இக்கல்வெட்டுகளின் விளக்கங்களைக் காணலாம். (தங்கேஸ்வரி, க., 2007: 46)

இவை இந்துப் பிராமணர்கள் இப்பகுதிகளில் வசித்தமைக்குச் சான்று பகர்கின்றன. பெரும்பாலானவை அபய, நாக, தேவநம்பிய, காமினிதிஸ போன்ற அரச பெயர்களைக் கொண்டவர்களால் வழங்கப்பட்ட நன்கொடை பற்றிக் குறிப்பிடுகின்றன. சங்க, பருமக, தேரக போன்ற சங்கப் பெயர்களைக் குறிப்பன சில நாக, அபய, திச அபய, கண போன்ற சிற்றரசர்களைக் குறிப்பன சில. இவற்றில் பெரும்பாலானவை கி.மு 3ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 1ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்டவையாகும். இவை நன்கொடைகளையே பெரும்பாலும் குறிக்கின்றன. இவை கி.மு கால சமய நடவடிக்கைகளையும் திராவிட முறையிலிருந்து எவ்விதம் பௌத்த நடவடிக்கைகள் மேலோங்கின என்பதையும் உணர்த்துகின்றன (மேலது:46).

மேல்வங்கர்குலத்து மகாசேனன், சங்கமிகுந்து நிகும்பலையாகம்முதலானகிரியைகளுடன் வழிபாடு நடத்திவந்த இராவணணுக்குப் பின், தட்சணகைலைக் கோயில் பூசைகளின்றி

பாழடைந்து கிடக்கின்றது என்றும், அதனைச் செப்பனிட்டு வைதீக வழிபாட்டு நெறிகளை ஆரம்பித்து வைப்பின் இலங்கை முழுவதும் மகாசேனன் வசப்படும் என்றும் கூறியதைக் கேள்வியுற்று வங்கநாட்டு சிவாலயமியற்றும் சிற்பிகளுடன் வந்து தட்சணகைலைக் கோயிலைச் செப்பனிட்டு, பூசைகளை ஆரம்பித்து வைத்தான். இவனுக்குப் பின், இவன் மகன் சிங்ககுமாரன் இராவணனால் பூசிக்கப்பட்டுக் கைவிடப்பட்டிருக்கும் உகந்தைமலைச் சிவாலயத்தை, வடநாட்டு (தென்னிந்திய) சிற்பிகளைத் தருவித்து மலையுச்சியில் எட்டுத்திக்குப் பாலகருக்கும் எட்டு ஆலயங்களும் எடுத்து பூசைகளுக்கும் திட்டம் வகுத்திருந்தான். சிங்ககுமாரன் செய்த உகந்தைக் கோயிற் திருப்பணி வரலாறுகள், முற்றுமுழுதாக வேதவழிபாட்டு விதிகளின்படியே கோவில்கள் எழுப்பப்பட்டிருந்ததனை எடுத்துக் காட்டுகின்றன. இக்காலத்தில் கலிங்கம், வங்கம் முதலிய நாடுகளில் வைதீகநெறியை மையமாக்கொண்டு சைவம் வளர்ந்திருந்த நிலையின் எதிரொலியாகவே இது காணப்படுகின்றது. (தனபாக்கியம்குணபாலசிங்கம்,1993:171)

மட்டக்களப்பு மாவட்டத்திலே பழுகாமம் என்னும் இடம் பழம்பெருமை வாய்ந்த ஓரிடமாகும். இது ஆதியில் வேடர் குடியிருப்புக்கள் காணப்பட்ட ஓரிடமாகும். இங்குள்ள திரௌபதி அம்மன் கோயில் அயலிலே பல நடுகற்கள் காணப்படுகின்றன இவை வீர வழிபாட்டில் ஏற்பட்ட நினைவுச் சின்னங்களாகவும், அதன் நிமித்தம் உருவாக்கப்பட்ட கோயிலாகவுமே கருதமுடியும். இக்கோயிலில் காணப்படும் மரச்சிலைகளும், வழிபாட்டு முறைகளும் வெறியாட்டும், பலியிடலும் சங்ககாலத்தில் நிலவிய பெருங்கற்காலக் கலாச்சாரத்தின் வழிபாட்டு முறையின் தொடர்ச்சி என்றே கருதக்கூடியதாக உள்ளது (தங்கேஸ்வரி,க., 2007:95-96).

## முக்குகர்களும் சமயப் பண்பாடும்

மட்டக்களப்பில் நீண்ட காலமாக வாழ்ந்து வரும் சமூகப் பிரிவுகளுள் முக்குக சாதியினர் முக்கியமானவர்கள் இவர்கள் நீண்ட காலமாகவே சைவ மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். மட்டக்களப்பு முக்குகர்கள் தாம் இராமனுக்கு கங்கை நதியைக் கடக்க உதவிய குகனின் மரபு வழியில் வந்தவர்கள் என்றே கல்வெட்டுக்களில் அழைக்கப்படுகின்றனர். இவர்களது குடியேற்றம் பற்றி மட்டக்களப்பு மான்மியத்தில் குறிப்பிடப்படுகின்றது. இவர்கள் வட இந்தியாவில் அயோத்தியிலிருந்து கடல் வழியாக வந்து மட்டக்களப்பு வாவியினூடே உள்நோக்கிச் செல்லும்போது மண்மேடு செறிந்து குறுகியதாயிருந்த ஒரு பகுதிக்கு "சுமண்முனை" என்று பெயரிட்டனர். அதன்பின் தொடர்ந்து வாவியின் தென் பக்கம் சென்ற போது அப்பால் செல்ல முடியாதவாறு தமது ஓடங்கள் தரை தட்டியதும், "இது மட்டும் மட்டடா, மட்டக்களப்படா" என்று கூறி அங்கு ஓடங்களை விட்டு இறங்கி ஒரு கிராமத்தை உருவாக்கினர். (நடராஜா,எப். எக்ஸ்.சி.,1998:7) காடுவெட்டி நாடாக்கி, ஏழு கிராமங்களை வெவ்வேறு இடங்களில் அமைத்து தம்மூரிலிருந்து மக்களைக் கொண்டு வந்து தொடர்ச்சியாகக் குடியேற்றி, சிற்றரசுகளை அமைத்து மட்டக்களப்பு மண்ணை வளம் கொழிக்கச் செய்த முதல் மக்களே முக்குகர் என வி.சி.கந்தையா குறிப்பிடுகின்றார் (2002:392).

மட்டக்களப்பு நாட்டின் தென் பாகத்தில் உள்ள அக்கரைப்பற்று, திருக்கோயில் ஆகிய பகுதிகளில் முக்குகர் வருகை பற்றிக் கூறப்படும் கல்வெட்டுப் பாடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில்

**"கலியப்தம் இருபத நூறு உடன் எண்ணூறு எட்டைந்து வர்ச்சரம்
என்றுரைப்பர் வலிமையுடன் மட்டுநகர் வந்திறங்கி
நாடறிய மல்லிகார்ச்சுன குருக்கள்
செகம் புகழக் கப்பல் வழி கொண்டு வந்தே
சேர்த்த பின்பு செப்பேடு திருமுகங்கள்
அவரவர்கள் பிரியமுறக் காணிபூமி
ஆலயத்திற்காய் அமைத்து அன்பினோடு
தவ விரத தமிழரச சுப நிலங்கள்
தழைத்தோங்க தங்கள் தங்கள்**

*சிவமுறைகள் மூவேந்தர் செப்பு நூல்*
*பட்டயத்தில் சிரமேற் கொண்டு*
*பவமணுகா முற தெரிந்து வாழ்ந்த அந்தப்*
*பதிபெருமை பகரப் போமோ?*
*(சிவசண்முகம், ஞா., 2000:05)*

மேற்கூறிய பாடலின் படி கலி பிறந்து இரண்டாயிரத்தி எண்ணூற்றி நாற்பதாம் ஆண்டுகளில் (கி.மு 261) முற்குகர் இங்கு வந்து குடியேறியதாகவும் மற்றும் குடியினரைக் கொண்டு வந்து குடியேற்றியதாகவும் நாடு நகரங்களை உண்டாக்கியதாகவும் தெரிய வருகிறது. இப்பாடலை வழங்கிய தம்பிலுவில்லைச் சேர்ந்த ஆறுமுகதேசிகர் என்னும் பெரியார் பாடலின் இறுதியில் கூறப்பட்ட பதி திருக்கோவில் பதி என்று குறிப்பிட்டுள்ளார். (மேலது: 5) மட்டக்களப்பு நாட்டிற்கு முதன் முதல் குடியேறிய தமிழர்கள் முக்குகர்களாக இருப்பதால் அவர்களே திருக்கோவில் பதிக்கு ஊழியம் செய்வதற்காக ஆட்களை கொண்டு வந்து குடியேற்றி ஆலயத்திற்கும், ஆலய ஊழியர்களின் சேவைக்கும் தேவையான காணிபூமிகளை வழங்கி ஆலய வழிபாட்டு முறையை நடைமுறைப்படுத்தினர் என்று பாடலின் மூலம் கூறப்பட்டுள்ளது. கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலகர்களாக ஆலயத் தொடக்க காலம் முதலாகவே இவர்கள் இருந்து வருகின்றனர் (தில்லைநாதன், சா., 2015:43).

இலங்கையில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் வடக்குக் கிழக்குப் பகுதியில் (அடங்காப்பற்று வன்னியர்களின் பிரதேசத்தை தவிர) மட்டக்களப்புப் பிரதேசம் மட்டுமே ஒரு குறிப்பிட்ட சாதியினரின் தேசம் என்று பண்டுதொட்டே அழைக்கப்பட்டு வந்தது. இதற்கு ஆதாரங்கள் பல உள்ளன. பண்டுதொட்டே இங்கு முக்குகர்களே அரசியலில் ஆதிக்கம் செலுத்தி சிறப்புடன் வாழ்ந்து வந்தமையினாலேயே இப்பிரதேசம் முக்குகர் தேசம் என்று அழைக்கப்பட்டது (சிவசண்முகம்,ஞா., 2000:12). வேறு எந்தத் தமிழ் சாதியினரின் பெயரிலும் அச்சாதியினரின் நாடு என்று எப்பிரதேசமும் வடக்கு- கிழக்குப் பகுதியில் குறிப்பிடப்படவில்லை என்பதும் முக்கிய அம்சமாகும்.

## அரசர்களும் இந்துப் பண்பாடும்

மட்டக்களப்பின் தொடக்ககால அரசுப்பிரிவை முக்கியப்படுத்தும் தன்மையில் கூத்திகனை மட்டக்களப்பு மான்மியம் இனங்காணுகிறது. கலிங்கனான சிறிகுலசேனனின் வங்க குலத் தாய்வழி வாரிசாகக் கூத்திகனை மான்மியம் குறிப்பிடுவதும் கால வரையறை செய்வதும் சற்று வேறுபடுவதைக் காணமுடிகின்றது. மகாவம்சம் போன்ற சிங்கள வரலாற்று நூல்கள் கூத்திகன், சேனன் இருவரையும் சேரநாட்டின் தளபதிகளாக வெளிப்படுத்துகின்றன. சேனன் அனுராதபுரத்தில் நிலை கொள்ள கூத்திகன் மட்டக்களப்புக்கு வருகின்றான். இவனே இன்றைய சம்மாந்துறையை இருக்கையாக்கி மட்டக்களப்பை ஆட்சி புரிந்தவனாகின்றான். (வெல்லவூர்க் கோபால், 2005:46) சில காலம் விஜயது வீபத்தில் இருந்த கூத்திகன் தான் திக் விஜயம் செய்யும்போது தங்கியிருந்த சிங்காரத் தோப்பில் ஒரு சிங்கார மண்டபத்தை அமைத்தான். தற்காலத்தில் அட்டப்பள்ளம் இருக்குமிடமே சிங்காரத் தோப்பு எனக் கருதப்படுகின்றது. (சிவசுப்பிரமணியம், வ., 2004:38) இப்பொழுது இங்கு கோயில் கொண்டிருக்கும் மகமாரி அம்மனுக்கு "சிங்காரபுர மகமாரி" எனப் பெயர் வழங்குகிறது. இம்மகமாரி பெயரில் ஒரு காவியமும் உண்டு. (மேலது: 38)

கூத்திகனைத் தொடர்ந்து சேனனுடைய ஆட்சி முடிவுற்ற பின்னர் கி.மு. 77 வரை மட்டக்களப்பு அனுராதபுர அரசின் ஒரு சிற்றரசாக நிருவகிக்கப்படுகின்றது. இதன் பின் அனுராதபுரம் நாக மன்னர்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர மட்டக்களப்பும் அவர்களின் கீழ் செல்கின்றது. மகாகுல நாகன், சோர நாகன் என்போர் ஆட்சியிலிருக்கின்றனர். இது குறித்து மான்மியமும் விளக்குகின்றது. விண்டு அணையை (விந்தனை) இருக்கையாக்கி மட்டக்களப்பு

அரசினை இயக்கர், நாகர் பொறுப்பேற்றதாகவும் கலிங்கரால் முன்னெடுக்கப்பட்ட சிவ வழிபாட்டினை ஒதுக்கிவிட்டு தங்களது சிறு தெய்வ வழிபாட்டினையே இவர்கள் முன்னெடுத்ததாகவும் முப்பது ஆண்டுகள் நீடித்த இவர்களது ஆட்சிபற்றி கலிங்கத்து மதிவாகுகுணனுக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் இதன் பின் கலிங்க படையெடுப்பால் நாகராட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதுடன் மட்டக்களப்பில் கலிங்கர் மீண்டும் ஆதிக்கம் பெறுவதாக மான்மியம் குறிப்பிடும் (வெல்லவூர்க் கோபால், 2005:47-48).

இக்காலப்பகுதியில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் அந்தணர் குடியேற்றமொன்றும் இடம்பெற்றுள்ளது. இவர்கள் பண்டைய பரந்த கலிங்கத்தின் பகுதியான சிறிசைலஜம்-மல்லிகார்ச்சுனம் போன்ற இடங்களிலிருந்து (இன்றைய ஆந்திராப் பகுதி) வந்தவர்களாகக் கொள்ளப்படுகின்றனர். மட்டக்களப்பு பிரதேச பண்டைய ஆலயங்களில் ஒன்றாகக் கருதப்படும் கருங்கொடித்தீவு (அக்கரைப்பற்று) சித்தி விநாயகர் ஆலய தலபுராணத்தில் கலிபிறந்து 2840 (கி.மு 260) கலிங்கருடன் இவர்கள் வந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. (வெல்லவூர்க்கோபால், 2016:139) இவர்கள் 'ஆதிசைவ சிவப்பிராமணர்கள்' என அதில் சுட்டப்படுகின்றது.

இது குறித்து வெல்லவூர்க்கோபால் அவர்கள் மேல்வருமாறு குறிப்பிடுவார் 'தென்னிந்தியாவிலிருந்து கி.பி 1ஆம் நூற்றாண்டில் திருக்கோவில் ஆலயத்துக்காக கொண்டுவரப்பட்டு தம்பட்டையில் கால்பதித்த பரத்துவாச வம்சம், அத்திரி வம்சம், காசிப வம்சம் ஆகிய முனிவர்கள் வழிவந்த பட்டர் குடும்பங்களைப் பற்றியதாக இவர்களது வரவு அமைகின்றது. இவர்களது சந்ததியினர் முன்னர் குமுக்கன் ஆற்றுக் கரையிலும் பின்னர் கருங்கொடித்தீவின் தில்லைநதிக் கரையிலும் குடியிருந்ததாகக் கூறப்படுகின்றது. அதன் பின்னர் இவர்கள் திருக்கோவில், அக்கரைப்பற்று, பனங்காடு போன்ற இடங்களில் வாழத் தொடங்கினர். மட்டக்களப்பு பூர்வசரித்திரம் கி.பி1ஆம் நூற்றாண்டை மையப்படுத்தியதாக கூறும் கருத்துக்களும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கவை' (2016:139).

சேனனுக்குப் பின் கலிங்க அரசு பாரத்தை தாங்க வாரிசில்லாதிருந்ததைக் கண்ட இயக்கரும், நாகரும் மேலெழும்பி தமதாட்சியைப் பலப்படுத்தியபொழுது, மீண்டும் கலிங்கராட்சியை உறுதிப்படுத்த வந்த கலிங்கனான இரஞ்சலன் (கி.மு 1) வருகை பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

> **'பாண்டியன், சோழன், சேரன் பரதநாடதனில்**
> **தோன்றியே கலியுகத் துரத்தனஞ்செய்து**
> **வேண்டியசிறையொடுவேந்தராயாண்டு**
> **தூண்டினார் மூவர் தேவாலயங்கள்**
> **சிறைகளை வகுத்துத் திருத்தொண்டராக்கி**
> **திறைபெறுக கலிங்கராசனைச் சேர்த்து**
> **துறைவளர் பரத நாடுகளாண்டு**
> **வந்தபின் கலிங்கன்'**
>
> **(பெரிய கல்வெட்டு வரி 62-69)**

இக்காலப் பகுதியில் முதலாவது தேசத்துக் கோயில் என்று சிறப்பிக்கப்படும் திருக்கோயிலில் திருப்பணிகள் இடம் பெற்றதோடு அதை அண்மித்து குடியேற்றங்களும் இடம் பெற்றுள்ளன. பிரசின்னசித்து என்பவன் காளிசேனனால் உடைக்கப்பட்ட நாகர்முனைச் சுப்ரமணியர் ஆலயத்தை (திருக்கோயில்) செப்பனிட்டுத் தரும் வண்ணம் புவனேயகயபாகுவிடம் கோரினான். புவனேயகயபாகுவும் திருச்சோழனுக்கு நாகர்முனைக் கோயிற் திருப்பணி வேலைகளுக்கு உதவுமாறு வேண்டுகோள் விடுக்க திருச்சோழனும் திரவியங்களுடன்சோழநாட்டுச்சிற்பிகளை அனுப்பிச் "செப்பனிட்டுக் கொடுத்தான். இவர்களோடு சோழநாட்டு வேளாளரையும், பதினெண் சிறைக்குடிகளையும் தருவித்துக் குடியமர்த்தினான். இவர்கள் திருக்கோயில், தம்பிலுவில், காரைக்காடு, அட்டப்பள்ளம், சிங்காரவத்தை முதலான பகுதியில் இன்று வாழும் வேளாளரின் ஆதிக்குடிகளாகலாம். இராமநாட்டு மறவர்குல இராசவம்சத்தைச்

சேர்ந்த ஏழு பெண்களுடனும், கணவன்மாருடனும் வந்த வேளாளர் முதலான குடிகள் வழியினரே இன்று தாழங்குடா, குருக்கள் மடம், செட்டிபாளையம், தேற்றாத்தீவு, களுதாவளை, களுவாஞ்சிக்குடி முதலான ஊர்களில் வதியும் வேளாளரும், பிற குடிகளும் எனக் கருதலாம்.

புவனேயகயபாகு நாகர்முனைத் திருக்கோயிற் திருப்பணிகளை நிறைவேற்றி 'திருக்கோயில்' எனப் பெயரிட்டு பிரசின்ன சித்துவிடம் கையளித்திருக்கையில் புவனேயகயபாகுவின் மனைவி தாய்மையடைந்ததினால், பிரசின்னசித்து மகிழ்ச்சியடைந்து ஒரு இராட்சியப்பிரிவை உருவாக்கிப் 'புன்னரசிகிரி' என்று பெயரிட்டுக் கல்லிலும் பொறித் புவனேயகயபாகுவிடம் கையளித்தான். புவனேயகயபாகு தன் மகன் மனுநேயகயபாகு இராசபருவகாலமடைய வங்க தேசத்து குலசந்திரனுடைய மகள் அழகுவல்லியை மணம் முடிப்பித்து உன்னரசுகிரியைப் பட்டம் கட்டினான்.

மனுநேயகயபாகுவும் தந்தையால் திருப்பணிகள் செய்த நாகர்முனை ஆலயத்தை அந்தணர் சொற்படி தமிழ் மதம் ஓங்கத் திரும்பவும் சோழநாட்டுச் சிற்பிகளைத் தருவித்து, செப்பனிட்டு குடமுழுக்கு விழாவிற்குரிய தினத்தைத் தன் தந்தைதாய் வம்சத்தார்க்கு (வங்கதேசம், சிங்கபுரம், சோழநாடு, கலிங்கநாடு, இராமநாடு ஆகிய நாடுகளின் மன்னர்களுக்கு) அறிவித்தான். அத்தருணம் இவன்வம்சத்தார் தத்தம் சுற்றாத்தாரைக் கொண்ட நாற்பது சிறைக்குடிகளையும், பல்வகையான திரவியங்களையும் ஏழு இராசர் கையில் கொடுத்தனுப்பிவிட்டனர். அவர்கள் யாவரும் சேர்ந்து ஒரு படகிலே நாகர்முனைக்கருகாயிருந்த களப்புமுகத்தில் வந்திறங்கினர். அப்பொழுது மட்டக்களப்பு மன்னன் தாசகன் பிரதானிகளும், மனுநேயகயபாகுவின் பிரதானிகளும் எதிர்கொண்டழைத்தனர். பின் இவர்கள் யாவரும் நாகர்முனைக் கோவில் குடமுழுக்கு விழாவை நிறைவேற்றிக் கோவிலின் ஆறுகாலப் பூசை நிருவாகங்களுக்கும் திட்டம் வகுத்தனர்.

பரிபாலனகாரர் ஏழு இராசர்களும், படையாட்சிகுலத்து மூன்று வன்னியரும் ஆவர். ஆனால் இவர்களுக்கெல்லாம் மேலதிகாரமுடைய கலிங்கத்துபிரசின்னசித்துவின்சந்ததியினரே இரு பாகையருக்கு (கருமகாண்டம், ஞானகாண்டம் ஆகிய கிரியைகளை நிகழ்த்தும் இரு பிராமணர்களுக்கு) முதன்மையாக இருப்பர். வேளாளரின் பதினாறு சிறைகளும் வேளாார் ஏவல்படி தொண்டுபுரிவர். அந்தணர்களும் மற்றும் ஐந்து பண்டாரங்களும் முதன்மை இராசர்களுடைய ஊழியராகக் கடமையாற்றுவர் என மனு நேயகயபாகுவும்,தாசகனும்வகுத்து,நித்திய, நைமித்திய பூசைகளுக்கு வருவாய் தரும் வண்ணம் சங்குமண்கண்டுவிற்கும், தடைகிரிக்கும் (தலைக்கல்) இடையில் 24 ஏரிகளை வெட்டி, 32 மதகுகளால் தொடுத்து சமுத்திரக்கரை வரை நெற்கழனிகளும் திருத்தினர் (தனபாக்கியம் குணபாலசிங்கம், 1993:67-68). இக்காலம் முதலாக இக்கோயில் தொழும்புகளுடன் சோழநாட்டு பதினெண் குடிகளும், அந்தணரும் இடம்பெறுவது சிறப்பியல்பாகும்.

கோவிலார் என்போர் ஆலயக் கடமைகள் நிமித்தம் இக்காலத்தில் குடியமர்த்தப்பட்டனர். தமிழகத்தில் இக்கடமைகளை பண்டாரம் (பண்டாரப்பிள்ளை) எனும் சாதியினர் மேற்கொள்வதைப் பரவலாகக் காணமுடியும். இவர்களது தோற்றுவாய் தமிழகத்தில் எந்தச் சமூகத்தைச் சார்ந்திருந்தது என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. எனினும் பண்டைய மட்டக்களப்புத் திருப்படை ஆலயங்களான திருக்கோவில், கோவில் போரதீவு, மண்டூர் ஆலயங்களில் வேளாளருக்கு புறக்கடமையும் கோவிலாருக்கு உள்கடமையும் அளிக்கப்பட்டிருப்பது அச்சமூகத்தினரின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதாகவே அமையும். இச்சமூகப் பெரியவர்களின் கருத்துப்படி அவர்கள் பொன்னாச்சி குடியைச்சார்ந்து வந்தவர்கள் எனக் கூறப்படுவது மேலும் ஆய்வினுக்கு உட்படுத்த வேண்டியதாக அமைகின்றது. பொன்னாச்சி என்பது வேளாளரிடையே அடையாளப்படுத்தப்பட்ட ஒரு முக்கிய குடிப்பிரிவாகும்

### ஆடகசௌந்தரியின் வருகை

கி.பி.1ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆடகசௌந்தரியின் வரவுபற்றி மட்டக்களப்பு வரலாற்று ஆவணங்கள் தெரிவிக்கின்றன. இக்காலத்துக்குரிய பாலநாகைக் கல்வெட்டு ஆடக சௌந்தரியைக் குறித்து எழுதப்பட்டதாகும். ஆடகசௌந்தரியின் வரவானது எத்தன்மையது என்பதனை முழுமையாகக் கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் இவள் பாணமைத் துறையில் வந்திறங்கியதாகக் கொள்ள முடியும். ஆடகசௌந்தரி வளர்ந்து உன்னரசுகிரிக்கு இளவரசி ஆக்கப்பட்ட பின்னர் அவளது நல்லாட்சியில் செய்த பெரும்பணிகளை இக்கல்வெட்டுப் பாடல்கள் வியந்துரைக்கின்றன. திருக்கோவில், கொக்கட்டிச்சோலை, தாந்தாலை, மாமாங்கம் என்பவற்றோடு திருக்கோணேஸ்வரத்துக்கும் பெருந்தொண்டாற்றியவளாக இக்கல்வெட்டு அவளைப் போற்றுகின்றது (வெல்லவூர்க்கோபால், 2016:35).

ஆறு மந்திரிகளின் துணைகொண்டு உன்னரசுகிரியை இவள் ஆட்சி செய்தாள். இதனை மட்டக்களப்பு மான்மியம் மேல்வருமாறு விபரிக்கின்றது

> **‘சீர்கலி உதித்த காலம் மூவாயிரத்து ஒரு நூற்றி எண்பதாம் ஆண்டில்**
> **வாரனி சௌந்தரி அசனனைவகுத்த போதில்**
> **பார்செழித்தோங்க மந்திரி அறுவரைப் பக்கமாக்கி**
> **கார் அகன்றிடவே செங்கோலோச்சிவள் அக்கருணையன்றே.’**
>
> **(நடராஜா,எப்.எக்ஸ்.சி.,1998:33)**

ஆடகசவுந்தரி உன்னரசுகிரில் ஆட்சி செய்திருக்கையில் ஓரிரவு இராமமூர்த்தி அவள் கனவில் தோன்றி அவள் முற்பிறப்பு வரலாற்றையும், அவளாட்சிப்பிரிவிலுள்ள காசி அவிமுத்தி நீர்கலந்த நதிபற்றியும் கூறிமறைந்தார். அதனால் ஆடகசவுந்தரி இந்நதியைத் தேடிக் கண்டறிந்து “மாமாங்கைநதி” எனப்பெயரிட்டு ஆண்டு தோறும் ஆடி அமாவாசையில் இந்நதித் தீர்த்தமெடுத்துத் திருக்கோயிற் சமுத்திரத்தில் விட்டு நீராடிவந்தாள்.இத்தீர்த்த விழா நெடுங்காலமாகப் பேணப்பட்டிருந்ததென்றும், அண்மைக் காலங்களிலே கைவிடப்பட்டதென்றும் வி.சி.கந்தையா குறிப்பிடுவர்.

கி.பி.2ஆம் நூற்றாண்டில் இலங்கை வேந்தன் இரண்டாம் கஜபாகு, சேரன் செங்குட்டுவன் வஞ்சிமாநகரில் எடுத்த கண்ணகி விழாவில் கலந்து கொண்டமை பற்றி தமிழக வரலாற்றுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. இதனை முக்கியப்படுத்தியதாக பல வரலாற்று ஆவணங்கள் காலக் கணிப்புக்களை செய்திருக்கின்றன. இவன் வஞ்சியிலிருந்து கண்ணகி சிலையுடன் நூற்றுக் கணக்கில் சேரக்குடிகளை அழைத்து வந்ததாகவும் கண்டியில் கண்ணகிக்குக் கோயில் அமைத்து (பத்தினி தெய்யோ தேவாலய) சிலையை பிரதிஷ்டை செய்த பின் சேரக்குடிகளை கிழக்கில் குடியமர்த்தியதாகச் சொல்லப்படுவதால் இவர்கள் குடியமர்த்தப்பட்ட இடம் மட்டக்களப்புப் பிரதேசமாக இருக்க வாய்ப்புள்ளது.

கி.பி. 3ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உன்னரசுகிரி சிங்ககுமாரனிடம் செல்கின்றது. இவனை ஆடகசௌந்தரியின் மகனாக மட்டக்களப்பு மான்மியம் சித்திரிக்கின்றது. இக்காலத்தே மட்டக்களப்பில் பிரசேது அதிகாரத்தில் இருக்கிறான். உகந்தை சிறந்த வழிபாட்டுத் தலமாக மாறுகின்றது. முன்னர் இது இராவணனின் வணக்கத்தலமாக இருந்ததென்பது ஐதீகம். இங்கு ஒரு மலைக் கோயிலையும் இதன் அடிப்பாகத்தே வேறு ஒரு கோயிலையும் சிங்ககுமாரனே கட்டினான் எனக் கூறப்படுகின்றது (வெல்லவூர்க்கோபால், 2005:53). இராவணனது வழிபாட்டுச்சிறப்பினை நினைகூர வேண்டி ஆடிப்புரணையிலும் தொடர்ந்து வரும் அமாவாசை தினத்திலும் இராவணனின் நினைவாக மலையில் தீபம் ஏற்றப்பட்டு நினைவு கூரப்பட வேண்டும் என சிங்க குமாரனால் திட்டம் பண்ணப்பட்டதாகவும் அதுவே தொடராக நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் உகந்தை தொடர்பான வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

**உலகநாச்சியின் வருகை**

கி.பி 4ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மண்முனை அரசு உருவாக்கமும் உலக நாச்சியின் ஆட்சிக் காலமும் இடம்பெறுகின்றது. இக்காலத்தே கோவில்குளம் சிவன்கோயில் கட்டப்படுவதோடு இரு தடவை தென்னிந்தியச் சமூகங்களின் மண்முனை குடியேற்றமும் இடம் பெறுகின்றது. மேலும், இக்காலத்தே கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றீச்சரம் மீளுருப்பெறுகின்றது. அமரசேனன் மகன் குணசிங்கனின் ஆட்சிக்காலத்தில் மட்டக்களப்பில் ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாக கலிங்க இளவரசி உலகநாச்சியின் வரவு இடம் பெறுகின்றது.

இவள் கலிங்க அரசன் குகசேனனின் புதல்வி எனத் தகவல்கள் கூறும். இவள் தனது தம்பி உலகநாதனுடன் வந்ததாக மட்டக்களப்பு சரித்திர ஏடுகள் குறிப்பிடுகின்றன. உலகநாச்சி புத்தரின் தரிசனத்துடன் சிவலிங்கம் ஒன்றைக் கொண்டு வந்ததாகக் கூறப்படுகின்றது. இக்காலமானது கலிங்கத்திலும் தமிழகத்திலும் பௌத்தம் வளர்ச்சி கண்டதோடு இலங்கையிலும் மிக வேகமாக பரவத் தொடங்கிய காலம். இது போன்ற வரலாறு சிங்கள மக்களிடையேயும் பேசப்படுகின்றது. கீர்த்தி சிறி மேகவர்ணனின் ஆட்சிக்காலத்தே (கி.பி 296-324) கலிங்க நாட்டிலிருந்து இளவரசி ஹேமமாலாவும் இளவரசன் தந்தாவும் புத்தரின் தசனத்தைக் கொண்டுவந்து மேக வர்ணனிடம் கையளித்ததாக அதில் சொல்லப்படுகின்றது. இதில் புத்தரின் தசனத்தை அனுராதபுர அரசிடம் கையளிப்பதைக் காரணப்படுத்தி குக வம்சத்தவரின் ஆட்சிப் பிரதேசமான மட்டக்களப்பில் சிவ வழிபாடு மேலோங்கப்படுவதன் அவசியம் உணரப்பட்டதா என்பது மேலும் தெளிவாக்கப்பட வேண்டியதாகிறது.

மேகவண்ணனிடம் தசனத்தைக் கையளித்த உலகநாச்சியின் விருப்பின்பேரில் அவளுக்கான வாழிடம் ஒன்றினைக் கோரி மட்டக்களப்பு அரசன் குணசிங்கனிடம் மேகவண்ணன் அவளை அனுப்புகிறான். குணசிங்கனின் ஆட்சி இருக்கை அப்போது பாணமையில் இருந்ததாகத் தகவல்கள் கூறுகின்றன. அவள் ஒரு கலிங்க இளவரசி என்பதனால் அவள் விருப்பத்தின் பேரில் தனியான சிற்றரசு ஒன்றை மண்முனை என்ற பெயரில் உருவாக்கி குணசிங்கன் கையளித்தான் எனத் தெரிகிறது. இன்றைய கோயில்குளம் பகுதியில் உலகநாச்சியின் இருக்கை அமைந்ததோடு அங்கு ஒரு சிவாலயமும் அவளால் உருவாக்கப்பட்டு கொண்டுவரப்பட்ட சிவலிங்கம் அதில் வைத்துப் பூசிக்கப்பட்டது. கோயில்குளம் சிவாலயத்தில் உலகநாச்சியால் ராஜ கோபுரம் அமைக்கப்பட்டது என்றும் பின்னர் இது அழிவுற்றது என்றும் அறியப்படுகின்றது.

உலகநாச்சியின் மாளிகை இன்றுள்ள தாழங்குடா கிறிஸ்தவ தேவாலயத்திற்குப் பின்புறம் அமைந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. அவ்விடம் இன்றும் மாளிகையடித்தெரு என அழைக்கப்படுவதை அதற்குச் சான்றாகக் கொள்கின்றனர். அதனைத் தொடர்ந்து கலிங்கத்திலிருந்து அவளால் அழைக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட குகக் குடிகளும் சிறைக் குடிகளும் புதுக்குடியிருப்பு உட்பட வாவியின் இரு பக்கமும் இரு வேறு தடவைகளில் குடியேற்றப்பட்டதையும் முனைக்காட்டுப்பகுதி உருவாக்கபட்ட போது காடுகளை அழிக்கையில் பண்டைய வேடர்களின் வழிபாட்டினை தொடர்ந்து கொக்கட்டி மர அடியில் மறைந்து போன சிவலிங்கம் மீண்டும் கண்டெடுக்கப்பட்டு தான் தோன்றீச்சரம் அவளால் அமைக்கப்பட்டதாகவும் தகவல்கள் கூறப்படுகின்றன. அதன் பின்புவடநாட்டுக் கொல்லடத்திலிருந்து பட்டர் (பூசகர்) மூவரை அழைத்துப் பூசைகளுக்குத் திட்டம் வகுத்து கழனிகளும் திருத்தி, தந்தபுரத்திலிருந்து ஆரம் தொடுக்கும் (பூமாலை கட்டும்) குடிகள் பதின்மரைத் தருவித்து, இரு ஆலயங்களுக்கும் ஆரங்கட்டும் குடிகளாக வகுத்திருந்தாள் (தனபாக்கியம் குணபாலசிங்கம், 1993:73). உலகநாச்சிக்குப் பின் மட்டக்களப்பையும்,

மண்முனையையும் குணசிங்கனின் பரம்பரையினரே இருநூறு வருடங்களாக ஆண்டிருந்தனர்.

பின் புவனேயகய பாகுவின் மகன் மனுநேயகஜ பாகுவும் சோழநாட்டுச் சிற்பிகளைத் தருவித்து ஏழு தட்டுத்தூபி, மதில் மண்டபங்கள், மாதர்சாலை, வாகன வீடு, கோபுரவாசல், தங்கத்தகடு புட்டிய கொடித்தம்பம், தூபியின் மேலே ஏழு தங்கக் குடமும் வைத்து ஆறு வீதிகள் அலங்கரித்து குடமுழுக்கு விழாவும் செய்தான். பின் ஆறுகாலப் பூசைகளுக்கும் ஊழியர்களைவகுத்துதிருப்பணிகளுக்கென நெற்கழனிகளையும் திருத்தி, ஏரிகளையும் அமைத்துக் கொடுத்தான் எனவும் மட்டக்களப்பு மான்மியம் விவரிக்கும் (மேலது: 103). கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தை முன்னிறுத்திய இந்துப்பண்பாடு இக்காலப்பகுதியில் நிலை கொள்ளலாயிற்று.

மட்டக்களப்பு இந்துப்பண்பாட்டில் வீரசைவ நெறியும் பழமையான மரபுடையவை. இந்தியாவிலே தோன்றிய வீரசைவம் இலங்கைக்கு வந்ததெவ்வாறெனின், திருக்கோயிற் திருப்பணியை நிறைவேற்றிய புவனேயகயபாகு நாகார்ச்சுன புரத்திலிருந்து சங்கமக் குருமார் பலரை வரவழைத்துக் குடமுழுக்குச் செய்வித்து அரனூழியம் வகுத்தமைத்து மட்டக்களப்பு மன்னன் பிரசின்னசித்துவிடம் ஒப்படைத்தான் என்பது வரலாறு. (இது நடந்தது கலி பிறந்து 3110 ஆகும்) அதன் பின் பிரசன்ன சித்துவின் மகன் தாசகன் காலத்திலும் சங்கமக் குருமார் தம்பட்டர் என வழங்கப்பட்டனர். இவர்கள் குடியிருந்த இடம் தம்பட்டையென வழங்கலாயிற்று அதன் பின் உலகநாச்சியும் தான்தோன்றீஸ்வரராலயத்துக்குப் பூசை செய்ய வடநாட்டுக் கொல்லடத்திலிருந்து பட்டர்கள் மூவரையும் வரவழைத்துப் பூசகர்களாக நியமித்திருக்கிறார். இவ்வாறு காலத்துக்குக் காலம் வீரசைவப் பரம்பரையைச் சேர்ந்த சங்கமக் குருமார் வரவழைக்கப்பட்டிருக்கின்றனர்.

சிங்கர் மட்டக்களப்புப் பகுதியை ஆண்டிருந்த காலத்திலும் தென்னிந்திய கிழக்கிந்திய மரபுகளின் படியே சைவத்தை வளர்த்திருந்தார்கள். இவர்களுள் கி.பி 9ஆம் நூற்றாண்டளவில் மட்டக்களப்பை ஆண்டிருந்த தருமசிங்கன் எனும் சிங்கர்குல மன்னன், கொக்கு நெட்டி ஆலயத்தை அந்தணர் ஆலோசனைப்படி கல்லினால் கட்டி, மூன்று ரதங்களும் சோழ தேசத்திலிருந்து தருவித்துக் கொடுத்தான். சிங்கர்குடி வழி வந்த கதிர்சுதன் சிவாலயங்களைச் செப்பனிட்டு, தனது நகரத்தவரை மறைநெறியால் தாவரபோசன வாசிகளாக்கிப் புலவர்கள் 'இராசாரசன்' எனப் புகழ்ந்து பாடும் வண்ணம் மனுநீதி காத்திருந்தான்(மேலது: 171).

கோவில் போரதீவைச் சேர்ந்த கோயிலார் எனும் சமூகம் தமிழ் நாட்டிலிருந்து கி.பி 9ஆம் நூற்றாண்டில் வரவழைக்கப்பட்டுள்ளனர். சித்திர வேலாயுதர் ஆலயத்திற்காகத் தாங்களும் சில பிராமணர்களும் தமிழகத்திலிருந்து செட்டிமாரால் நேரடியாக அழைத்து வரப்பட்டதாகவும் தங்களின் வழியினரே பின்னர் கொக்கட்டிச்சோலை மற்றும் மண்டூர் ஆலயத்திற்கு சோழராட்சியில் மட்டக்களப்பு கலிங்க மன்னனால் கொண்டு செல்லப்படதாகவும் சில பாடல்களை ஆதாரப்படுத்தி இவர்கள் கூறுகின்றனர். தமிழக வேளாளரில் தாங்களே உயர்நிலை பேணியவர்கள் எனவும் அதனாலேயே தாங்கள் பிராமணருடன் உட்கடமையாளர்களாக ஆக்கப்பட்டனர் எனவும் வாதிக்கின்றனர்.

அமரசேனன் (கி.பி.644) மட்டக்களப்பின் மன்னனாக ஆட்சிபுரிகின்ற காலப்பகுதியில் நடைபெற்ற முக்கிய சம்பவமாக வைணவ சமயம் இங்கு முதன்முதலில் அறிமுகம் செய்யப்பட்டமையைக் குறிப்பிடலாம் (சிவசுப்பிரமணியம்,வ.,2004:44).'இராமர் நாட்டு மறவர் குலத்து இராசவம்சத்தைச் சார்ந்த ஏழு பெண்கள் தங்கள் தங்கள் மணமகனுடனும் சிறைத்தளங்களுடனும் வவனியர் குலத்து குருகக் குடும்பம் ஐந்தும் சேர்ந்து மட்டக்களப்பின்

பரிசுத்தங்களை அறியும்படியும் வைதூலிய சமயத்தை மாற்றி "அரிநமோ" என்னும் நாமத்தைப் போதிக்க வேண்டுமென்றும் கம்பர் இயற்றிய இதிகாசப் பிரதியை எடுத்து வந்தனர்' (மேலது:44). அமரசேனன் இவர்களை வரவேற்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஊரளித்து வன்னிச்சி என்ற விருதும் அளித்தான். இவர்களது குடியேற்றத்தினால் வைணவ சமயப் பண்பாடும் இங்கு நிலை கொள்ளலாயிற்று.

## முடிவுரை

இலங்கையில் அநுராதபுரகால ஆட்சிப் பகுதியில் மட்டக்களப்பில் இந்துப்பண்பாடு சிறந்து விளங்கியமைக்கு போதுமான சான்றுகள் கிடைப்பதை மேற்குறித்த கருத்துக்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இங்கு நிலவிய சுதேசப் பண்பாட்டோடு இந்தியாவிலிருந்து ஏற்பட்ட பல்வேறு குடியேற்றங்களின் மூலமாக உருவான இந்தியப் பண்பாடுகளும் கலந்த ஓர் இந்துப் பண்பாடு இக்காலப்பகுதியில் நிலவி வளர்ச்சி பெற்றிருந்தமையினை அறிய முடிகின்றது. தேசத்துக் கோயில்களை அடிப்படையாகக் கொண்ட குடியேற்றங்களும் சமூக வழமைகளும் மட்டக்களப்பின் இந்துப் பண்பாட்டில் முக்கிய தாக்கத்தினைச் செலுத்தியிருப்பதும் இதன் மூலம் வெளிக் கொணரப்படுகின்றது.

## உசாத்துணை நூல்கள்

1. வெல்லவூர்க்கோபால், 2005, மட்டக்களப்பு வரவாறு, மனு வேதா, மட்டக்களப்பு.
2. மௌனகுரு,சி., 2014,மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
3. மௌனகுரு, சி., (பதி.) 2003, மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப்பண்பாடு, இரண்டாம் உலக இந்துமாநாடு - மட்டக்களப்பு பிரதேசக் கிளை, மட்டக்களப்பு.
4. தங்கேஸ்வரி,க., 2007, கிழக்கிலங்கைப் பூர்வீக வரலாறு, மணிமேகலைப் பிரசுரம், சென்னை.
5. தனபாக்கியம் குணபாலசிங்கம், 1993, மட்டக்களப்பு மான்மியம் - ஓர் ஆராய்ச்சி, மட்டக்களப்பு.
6. நடராஜா, எப்.எக்ஸ்.சி., (பதி), 1998, மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை, மட்டக்களப்பு.
7. கந்தையா,வி.சீ., 2002,மட்டக்களப்புத் தமிழகம், எக்ஸில், பிரான்ஸ்.
8. சிவசண்முகம்,ஞா., 2000, மட்டக்களப்புக் குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும், விபுலம் வெளியீடு, மட்டக்களப்பு.
9. தில்லைநாதன்,சா., 2015, மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
10. சிவசுப்பிரமணியம்,வ., 2004, மட்டக் களப்பு நாட்டாரியல், மட்டக்களப்பு.
11. வெல்லவூர்க் கோபால், 2016, மட்டக்களப்புத் தேசம் வரவாறும் வழக்காறும், சேமமடு பதிப்பகம், மட்டக்களப்பு.